ஆளத்தெரியாதவர்கள் என்பது உண்மையே!

அரசியலார் கடமையைச் செய்யத் தவறிவிட்டனர்

பொதுமக்களே பொறுப்புணர்ச்சி கொள்ளவேண்டும்

(0)

ஆளவந்தாரை நம்புவதில் பயனில்லை

Phone No 4502

அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (3—6—50) வெளியூர் (4—6—50) [இதழ் 269

சொந்த சர்க்காரைச் சந்தியில் நிறுத்துகிறார் பண்டித நேரு

35 கோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பணி, மிகவும் கடினமான பணியே இதைவிடப் பெரிய பணி, இன்றைய நிலையிலே வேறெதுவுமில்லை. இப்பணியில் அவசியம் நாம் வெற்றிகாணவேண்டும். அப்படி நாம் வெற்றி காணவேண்டுமானால், நம் எல்லோருடைய ஒத்துழைப்புடன், அரசாங்கமும் நமக்கு வழி காட்டித் தீரவேண்

[illegible]

...மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால், ... களைப் பரிமாற அரசாங்கத்தால் முடியாது.

இந்தப் பெரிய பிரச்சினையை நீங்களும், நானும் உணர வேண்டும்.

பேசுகின்ற தொனி, முறை இவற்றைப் பார்க்கின்ற போது, பொது மக்களில் யாரோ ஒருவர் பேசுகிறார் என்றே வாசகர்கள் நினைக்கக் கூடும். ஆனால், உண்மை அதுவல்ல. பொதுமக்களில் ஒருவர்; ஆட்சி பீடத்தில் மிக உயர்ந்த பொறுப்பு வாய்ந்த பதவியிலிருக்கும் மனிதர் — மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்! இப்படிப்பட்ட பெரிய மனிதர் வேறு யாருமல்ல, இந்திய உபகண்டத்தின் முதலமைச்சர் பண்டிதர் நேருதான், இங்ஙனம் பேசியுள்ளார்.

திருவனந்தபுரத்திலே, பல்கலைக்கழக ஸ்டேடியத்தில், பல்லாயிரக்கணக்கான மக்களிடையே நின்று இவ்வாறு பேசியுள்ளார் நேரு. அவர் பேசிய கால அளவு 90 நிமிடம். இந்த 90 நிமிடத்தில் பெரும்பகுதி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது எப்படி என்பது பற்றிய பேசியிருக்கிறார் — அல்ல — புலம்பியிருக்கிறார்.

பொதுமக்களின் முறையீடுகளுக்குச் செவிசாய்க்க வேண்டிய பதவியிலிருக்கும் பண்டிதர், பொதுமக்களில் ஒருவராகத் தன்னை ஆக்கிக்கொண்டு "அரசாங்கம் பொது மக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

தெ. ஆ. இந்தியர் பிரச்னை:

இன வட்டார மசோதா இன்னல் தரவல்லது

'வட்டமேஜை மாநாடு என்று எங்கே கூடப்போகிறது'?

நேட்டால் பத்திரிகை கேள்வி

டர்பன், ஜூன் 2— ... இந்தியர் பிரச்னை ... இந்தியா, பாகிஸ்... ஆப்பிரிக்கா இம்மூன்று ...ளும். வட்டமேஜை ...வகே. எப்பொழுது கூடப் போகிறது என்பது குறித்து எவ்வித முடிவும் செய்யப்பட்டதாகத் ... வில்லை என்று நேட்டால் விட்னஸ்' பத்திரிகை கூறுகிறது.

இந்தியாவிலோ அல்லது பாகிஸ்தானிலோ இம்மாநாடு நடைபெறுது என்று பாகிஸ்தானிலிருந்துகிடைத்த செய்தி யொன்று கூறுகிறது. ஆப்பிரிக்காவிலும் நடைபெறுது என்பது கேப்டவுனிலிருந்து கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது. அநேகமாய் நடுநிலைமை நாடு ஒன்றில், இம்மாநாடு நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இன்னும் இரண்டு அல்லது ... மாதங்களில் இம்மாநாடு ... பெறவு... தொ... என்பதைக் குறிப்பிட்டு அப்பத்திரிகை கூறுவதாவது:—

இந்தியா-பாகிஸ்தானுடன், எதிர்காலத்தில் தென்னாப்பிரிக்கா நல்லுறவு நீடிக்க வேண்டுமென்றால், இன வட்டார மசோதா சட்டமாகும் வரை இம் மாநாட்டை நடத்தாது காலம் தாழ்த்தக்கூடாது. இந்தியா-பாகிஸ்தானுடன் உறவு குலையும்படியான எதையும் செய்யலாகாது.

தொட்ட குற்றம்!

வெள்ளையர் உட்காருவதற்காக ரயில்வே நிலயத்தில் போடப்பட்டிருந்த பலகை யொன்றின்மீது மீது சாய்ந்து, ரயில்வே 'அதர்தாயிட்' (ஒதுக்கல் திட்டம்) முறையை மீறினரென்று, ஒரு மலேயா உபாத்தியாயர் மலான் நாட்டில் குற்றம் சாட்டப்பட்டார்.

தென் ஆப்ரிக்காவில் உபாத்திமைத் தொழில் செய்யச்சென்றுள்ள லதீபா பெஹார்தீன், வழக்குமன்றத்தில் நிறுத்தப்பட்டு நீதிபதியார் பலமாகக் கண்டிக்கப்பட்டார்.

சமீபத்தில் உயர்நீதி மன்றம் அபர்தாயிட் முறை ரயில்வேக்களில் செல்லாதென்று தீர்ப்பளித்ததால் தான் இதோ விட்டாரென்று சர்க்கார் வக்கீல் நீதிமன்றத்தில் அறிவித்தார்.

சென்னைக்கு 930 டன் ஒரிஸா அரிசி

சென்னை, ஜூன் 2— சென்னைக்கு ஒரிஸா அரிசி 930 டன் எஸ். எஸ். சரோஜனி என்ற கப்பலில் வந்துகொண்டிருக்கிறது. ஒரிஸாவில் சந்த்பாலி என்ற இடத்தைவிட்டு இக்கப்பல் மே 31 தேதிக்குப் புறப்பட்டிருக்கிறது.

ஹோட்டல் முதலாளிகள் ரேஷன்கடைகள் வைக்கக்கூடாது

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, ஜூன் 2— ஹோட்டல் வைத்திருப்பவர்கள், ரேஷன கடைகளைச் சொந்தத்தில் வைத்து நடத்தக்கூடாது என்று, சென்னை சர்க்கார் சுற்றறிக்கை யொன்று கூறுகிறது இப்பொழுதுள்ள உத்திரவுப்படி ரேஷன் கடை வைத்திருப்பவர், ஒரு கடை மட்டுமே தான் வைத்து நடத்தலாம். ஒரு மொத்த வியாபாரி, அல்லது ஒரு மில் வைத்திருப்பவர் சில்லரை வியாபாரியாக ஆகமுடியாது.

இந்த உத்திரவுகளை அமுல் நடத்தும்படி ஜில்லா கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர் ஒரு ரேஷன் கடைக்காரர் வேறு கடைகளை நடத்தினால், ஒரு கடையிலிருந்து மற்றொரு கடைக்கு ஸரக்குகளை மாற்றிவிடுவதாகவும், அதே மாதிரி ஹோட்டல் வைத்திருப்பவர்களும் ரேஷன்கடைவைத்திருந்தால் கடைசாமான்ஹோட்டலுக்குப் போய்விடுகின்றனவென்றும், இவைகளைத் தடுக்கவே இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

தங்கள் ஜில்லாவில் ஹோட்டல் வைத்திருப்பவர்களே ரேஷன் கடைகள் வைத்திருந்தால், உடனே ரேஷன்கடைகளைப் பிறரிடம் ஒப்படைக்கவேண்டுமென்று, கலெக்டர்களுக்குக் கிடைத்த சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சுரண்டும் 'ஜகன்னாதர்கள்' இனப்பற்று காணீர்!

மார்வாடி அகதிகளுக்கு 'ரோல்ஸ்ராய்ஸ்' மோட்டார்

(0)

சென்னை மக்கள் பணம் பஞ்சாய்ப் பறக்கிறதே!

கல்கத்தா, ஜூன் 1— கிழக்கு வங்காள அகதிகள் நிவாரண நிதிக்கு "ரோல்ஸ் ராய்ஸ்" மோட்டார் கார் ஒன்று, சென்னையிலிருந்து கல்கத்தா வந்தடைந்துள்ள தென்று ஒரு செய்தி கூறுகிறது.

அனுப்பிய வள்ளல்கள்(!) சென்னை மக்களைச் சுரண்டி முதலாளிகளாக மாறியுள்ள ஜகன்னாத்தாஸ் என்ற மார்வாடியும், அவருடைய இரண்டு சகோதரர்களுமாவார்கள். தம்முடைய தந்தையின் ஞாபகார்த்தமாகக் கல்கத்தாவிலுள்ள மார்வாடி சங்கத்துக்கு மோட்டார் கார் அனுப்பினார்களாம். மார்வாடி சங்கம், இதை விலைக்கு விற்று பணத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுமாம்!

ஒரு 'ரோல்ஸ் ராய்ஸ்'காரின் விலை, யுத்தகாலத்துக்கு முன்பு ஐம்பதாயிரம் ரூபாய்; இப்பொழுது அதன் விலை இரட்டித்துள்ளது. சென்னை மாகாணத்திலேயே மூன்று அல்லது நான்குபேர்களிடம்தான் இத்தகைய மோட்டார்கள் இருக்கின்றன அவைகளில் ஒன்றை வாங்கிக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டார்கள். இங்கு வட்டிக்கடை வைத்திருக்கும் மார்வாடிகள்.

பண்பாட்டில் தமிழருக்கொப்பான வங்காள மக்களின் வாழ்க்கைக்கு வழி ... அல்ல; கிழக்குப்பாகிஸ்தானை வட்டிக் கடைவைத்துச் சுரண்டிட. நாட்டு மக்களின் எழுச்சியின் காரணமாக மூட்டை கட்டிக்கொண்டு வெளியேற நேர்ந்த மார்வாடிகளின் வாழ்வுக்காக.

சென்னையில் அன்னியரின் சுரண்டலினால் வீடுவாசலிழந்த மக்கள், பர்மா, மலேயா நாடுகளில் பிழைக்கச்சென்று, சூழ்நிலையின் காரணமாக அகதிகளாகத் தாய்நாடு திரும்பினார்கள். அன்று செல்லாக்காசு கொடுக்கவில்லை இந்த மார்வாடிகள். இன்று ரோல்ஸ் ராய்ஸ் கார் வாங்கி அனுப்புகிறார்கள் மார்வாடி அகதிகளுக்கு! நாட்டின் எப்பகுதியில் இருந்தாலும், மற்றொரு வகுப்பாரைப்போல, மார்வாடி சுரண்டல் கூட்டமும் அவசியமேற்படும் போது 'எல்லோரும் ஓர் இனமாக' மாறிவிடுகின்றார்கள் அல்லவா?

லண்டன், ஜூன் 2— ஜீவசாதத்திற்காக 8000 ஏக்கர் எஸ்டேட்டை வாங்கியிருப்பதன் மூலம், பிரிட்டன் பர்மா நீவின் ... உதவி செய்திருக்கிறது.

மாலை மணி

சென்னை 3—6—50 சனிக்கிழமை

மதுரை மாவட்ட மாநாடு

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு கூடுகிறது. பெருமிதத் தோடு, பூரிப்போடு!

ஜூன் திங்கள் 10, 11-ம் நாட்களில், சோழவந்தானில் கூடுகிறது! நாட்டவரையெல்லாம் கூவி அழைக்கிறது—துன்பம் துடைக்க, தெளிவு பயக்க, திட்டம் தீட்ட, வாழ வழி வகுக்க அழைக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றம் எடுத்தற்குப் பிறகு, கழகத்தின் பாசறையிலே தங்களை வீரர்களாகப் பதிவு செய்துகொண்ட பாண்டிய நாட்டு மறத்தமிழர்கள்—திராவிடர்கள் முதன் முதலாக மாநாடு கூடுகின்றனர் நாட்டில் நிலவும் நெருக்கடிகளை ஆராய்ந்து, அவைகளைப்போக்கவும், இன்பத் திராவிடம் காணும் நெறியில் தாங்கள் செய்யவேண்டிய கடப்பாடுகளை வகுத்துக்கொள்ளவும் மதுரை மாவட்டத்தினர் மாநாடு கூடுகின்றனர்!

சோழவந்தான்—இயற்கை வளச்சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் ஒருங்கே பெற்றுத் திகழும் அழகிய சிறு நகர். இயற்கை, அங்கே தன் கோல மெலாங்காட்டி குமிழ் சிரிப்பு சிரிக்கிறது. நீர் வளமும் நில வளமும், மண்வளமும்; மலை வளமும் ஆற்றுக்கால் பாய்ச்சலும், ஊற்றுக்கால்பெருக்கும், செந்நெல் பரப்பும், தீங்கரும்பின் வரிசையும், சோலையும், சாலையும் செறிந்து காணப்படுகின்றன அங்கே! இயற்கை கொலுவீற்றிருக்கும் அப்பொலிவுடை நகரிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மாநாடு கூடுவது, கண்ணுக்கு விருந்து களித்துக்கும் விருந்தாகும் இன்பத்திராவிடத்தின் எழிற்கூடமென விளங்கும் சோழவந்தானில், திராவிட நாட்டின் தீரர்கள் திட்டம் தீட்டக் கூடுவது எல்லாவகை பொருத்த முடையதாகும்.

சோழவந்தான், தன்னாட்டை விட வளப்பம் பொருந்தியதாக இருப்பது கண்டு, சோழமன்னன் உவந்தான் என்றும், அதனால்தான் அதற்குச் சோழனுவந்தான், சோழவந்தான் என்ற பெயர்கள் வந்ததாகவும் கூறுவார்கள். மற்றுஞ் சிலர் அதற்குச் சோழாந்தகபுரம் என்பதுதான் பெயர் என்றும் அதுதானசோழவந்தான் என்று மருவிவந்தது என்றும் சோழனது படையைப் பாண்டிய மன்னன் வீதியில் தோற்கடித்துத் துரத்தியதால், சோழனது உயிரைப் போக்குவதற்குக் காரணமாக இருந்த ஊர் என்ற பொருள்படும்படி, அது சோழாந்தகபுரம் என்று வழங்கப்பட்டது என்றும் கூறுவர். மேலும் விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில், அரியநாயகம் அமைச்சராயிருந்து அந்நகரை வளப்படுத்தினார் என்றும் வரலாற்றுச் செய்தி தெரிவிக்கிறது. எப்படியோ வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பாண்டிய மண்டலத்தின் பகுதியாகிய சோழவந்தானில் மாநாடு நடைபெறுவது, புதியதோர் வரலாற்றினை உண்டாக்க ஊக்கமளிப்பதாகும் இந்தி ஆதிக்கத்தை அழித்தொழிக்க, சூளுரைமேற்கொள்ளும் மாநாடாக அது சிறப்புப் பெற்றாலும் பெறக் கூடும். அத்தகைய சோழவந்தான் அனைவரையும் கூவி அழைக்கிறது. ஜூன் திங்கள் 10, 11 நாட்களில் "வருக வருக" என்று!

திராவிட முன்னேற்றக் கழகம் தூய்மையான அடிப்படையில் எழுந்து, உயரிய நோக்கத்திற்காக, உண்மை உழைப்புடன் பாடுபட்டுவருகிறது என்பதற்கு அது நாள்தோறும், பொழுதுதோறும் வளர்ச்சி பெற்று வருவதே போதிய சான்றாகும். உழைப்புக்கும் உணர்ச்சி வேகத்திற்கும் மதுரை மாவட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும். அண்மைக் காலங்களில் மதுரை மாவட்டத்தில் சின்னஞ் சிறு பட்டிதொட்டிகளிளெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் கிளைத்[illegible] தருப்பதைக் கவனித்தால், முன்னேற்றக் கழகத்தினிடத்து மக்களுக்கு எத்துணையளவு பற்று மிகுந்திருக்கிறது என்பது எளிதில் விளங்கக்கூடும்.

போதிய பிரசார வசதியில்லாததால், கொள்கையை அறியாதவர்களாகப் பலர் அங்காங்கே இருக்கிறார்களே யொழிய பிரசாரத்திற்குப் போதுமான ஆள் வசதியும் பொருள் வசதியும் இருந்தால், கழகக் கொள்கைகளை மக்கள் அறிய வாய்ப்பு ஏற்படும் அப்பொழுது கொள்கைகளின் சிறப்பை மக்கள் அறிந்து, ஏற்றுக்கொள்ள ஏராளமானவர்கள் முன் வருவார்கள் என்பது திண்ணம். கொள்கை விளக்கஞ்செய்யும் சீரிய பணிகளியே சிறந்த ஒன்றுதான் ஆங்காங்கே மாநாடு கூட்டுவது அதனை பொட்டித்தான் மதுரை மாவட்டக் கழகம் மாநாடு கூட்டியுள்ளது.

நாட்டில் இப்பொழுது நிலவும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கும் இந்தி மொழிக் கட்டாயத் திணிப்புப் பற்றிய விளக்கங்கள் வழங்குவதற்கு, இந்த மாநாடு ஏற்ற வாய்ப்புடையதாக இருக்கின்றது. அந்த வகையில், இந்த மாநாடு சிறப்புக்குரிய தொன்றாகவே கொள்ளப்படும்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்க தோழர் ஈ. வே. கி சம்பத் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் இளைஞர் உலகத்தின் கட்டுப்பாடான எழுச்சிக்கும், உணர்ச்சிக்கும், சொல்லாற்றும் திறனுக்கும் அவர் சிறந்த எடுத்துக்காட்டாவார். கொள்கையைத்தெளிவுபடுத்தும் ஆற்றலும், இனிய எளிய தமிழில் சொற்பொழிவாற்றும் திறமையும், கேட்போரைத் தன்வயமாக்கும் தன்மையும் அவரிடம் சிறப்பான முறையில் திகழ்கின்றன. இளைஞர்கள் படையை நடத்திச் செல்லுதற்கான தகுதியும், திறமையும் படைத்த அவர், மாநாட்டிற்குத் தலைமை தாங்குவது பாராட்டி மகிழத்தக்கதாகும்.

மாநாட்டைத் துவக்கி வைக்க, பகுத்தறிவுக் கருத்துக்களை நாட்டில் பரப்பும் பணியில் நீண்டகாலமாகவே உழைத்து உழைத்துக் கொள்கைவயிரம் பாய்ந்த நெஞ்சினை உடைய குடந்தை தோழர் கே கே நீலமேகம் இசைந்திருப்பது, பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. கழகத்தைக் காத்து வளர்த்து வருவதில், அவர் மிகக் கண்ணுங் கருத்துமாக அந்நாள்தொட்டு இருந்து, பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையே செயலாற்றி வரும் செம்மலாவார். உறுதியும், ஊக்கமும், எடுத்தக் காரியத்தைச் செய்து முடிக்கும் திறமையும் கொண்ட அவர், மாநாட்டைத் துவக்கி வைப்பது பொருத்தமானதே.

மேலும் கழகச் சொற்பொழிவாளர்களின், மடை திறந்தாலன்ன சொற்பொழிவுகள் பாமர மக்களின் வரண்ட உள்ளங்களைச் செழுமையுடையனவாகச் செய்து அறிவுப் பயிரை வளரச்செய்யும் என்பதில் ஐயமில்லை.

நாடகங்களின் [illegible] டிற்கு நல் [illegible] உண்டாக்கும் [illegible] மாநாட்டு வரவேற் [illegible] ரால் [illegible]டுக்கப்பட்டுள் [illegible] "சந்[illegible] மோகன்" எ [illegible] பிரசார நாடகங்களும நடைபெற இருக்கின்றன. அவை கண், காது கருத்து மூன்றிற்கும் இன்பம் பயப்பனவாக இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

தோழர் டி. வி. நமசிவாயம் அவர்களின் இசையரங்குடன் மாநாடு துவக்கம் பெறுவது, மாநாட்டின் தனிச் சிறப்புகளிலே ஒன்றாக இருக்கிறது.

விடா முயற்சியும், விரிந்த உள்ளமும், கொள்கைப் பற்றும் கொண்ட தோழர் டி. ஆவடையப்பன் அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராகவும், செயலாற்றும் திறனும். உள்ள உரமும், உறுதியான உழைப்பும் படைத்த தோழர்களான எஸ். முத்து என். முத்து, இ. காத்தான் எம். அய்யாசாமி ஆகியவர்கள் வரவேற்புக் குழுவினராகவும், அமைந்த மாநாடு சீரும் சிறப்பும் பெற்று நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

மதுரை மாவட்ட மக்களும், மற்றுமுள்ள மாவட்டங்களிலுள்ள கழகத் தோழர்களும் மாநாட்டில் பெருவாரியாகப் பங்குகொண்டு, மாநாட்டினை வெற்றிபெறச் செய்ய எல்லாவகையிலும் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

வெல்க மதுரை மாவட்ட மாநாடு!

ராஜகுமாரி அமிர்தகௌரிக்கு விருந்து

லண்டன், ஜூன் 2—

ஜினிவாவில் கூடிய உலக சுகாதார மாநாட்டிற்கு இந்தியாவின் பிரதிநிதியாக சென்றிருந்த, இந்திய சுகாதார மந்திரி தோழியர் ராஜகுமாரி அமிர்தகௌரிக்கு இந்தியாவிலிருந்து ஒருவிருந்து அளித்தது.

தோழியர் அமிர்தகௌரி இங்கிலை சுகாதார நிபுணர்களைச் சந்தித்துப் பேசிவருகிறார். இன்னும் ஒரு வாரத்தில் அவர் இந்தியா திரும்புகிறார்.

தூக்குத் தண்டனைக்குத் தூக்கு

ஆஸ்ட்ரியா சர்க்கார் நடவடிக்கை

வியன்னா, ஜூன் 2—

ஆஸ்திரியா சர்க்கார் 1951-ம் ஆண்டு ஜூன் 31-ந் தேதிக்கு பிறகு, தூக்குத் தண்டனையை அடியோடு ஒழித்துவிட முடிவு செய்து இருக்கிறது.

தூக்குத் தண்டனையை அனுமதிக்க அதிகாரம் கொடுக்கும் சட்டம் அடுத்த ஆண்டு ஜூன் 30-ந் தேதியுடன் முடிவடைகிறதாம்.

இச்சட்டம் காலாவதியானபின் இதை அமுலிலிருக்கவேண்டுமாவேண்டாமா என்கிற விஷயம்பற்றி பார்லிமெண்டில் வோட் எடுக்கப்பட்டதில், தூக்குதண்டனையை ஒழிக்கவேண்டும் எனபதை ஆதரித்து 86 வோட்டுகளும், எதிர்த்து 64 வோட்களும் பதிவாயின.

யுத்தத்திற்குபின் தூக்குத் தண்டனையைத் தொடர்ந்து நடத்திவந்தும், குற்றங்கள் எதுவும் குறைந்துவிடவில்லை என்பது எடுத்துக்காட்டப்படுகிறது.

சென்னைக்கொரு திட்டக்குழு

நியமிக்கப்படுமென அறிவிப்பு

கோவை, மே 31—

முதல் மந்திரியைத் தலைவராகக் கொண்ட புனரமைப்புத் திட்டக் குழு ஒன்று, சென்னை மாகாணத்துக்கு அமைக்கப்போவதாக முதல் மந்திரி [illegible]

[illegible] உணவு உற்பத்தியை அதிகரிக்குமென்று தோழர் குமாரசாமி ராஜா கூறினர். இத்திட்டக்குழுவில் அதிகாரிகள் யாரும் இருக்க மாட்டார்களென்பதையும் அவர் அறிவித்தார்.

ஹங்கேரியின் எல்லையில் 10 பட்டாளங்கள்

லண்டன், ஜூன் 2—

மார்ஷல் டிட்டோவின் தன்னம்பிக்கையைக் கண்டு, காமின்பார்ம் நாடுகளுக்கு கோபிப்பு ஏற்பட்டிருக்கிறதெனவும் அவைகள் பலத்த ஆயத்தங்களை எடுத்து வருகிறதென்றும் செய்தி கிடைத்திருக்கிறது.

ஹங்கேரி சர்க்கார், யூகோஸ்லாவியாவை ஒட்டிய தன் எல்லையில் 10-மைல் தூரம்வரை உள்பகுதி பாதுகாக்கப்பட்ட பிரதேசம் என்று அறிவித்திருக்கிறது. இதேமாதிரி பல்கேரியாவும், ருமேனியாவும் நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஹங்கேரி தன் எல்லை காவல் படையை அதிகரித்திருப்பதுடன், 200 மைல் நீளமுள்ள தன் எல்லையில் 10 பட்டாளங்களைச் சேர்த்து வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

வேறு வழியில்லையாம்!

லண்டன், ஜூன் 2—

செஞ்சீனாவின் விருப்பத்திற்கு உடன்படுவதைத் தவிர திபேத்திற்கு வேறு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்று டில்லியிலிருந்து கிடைத்துள்ள செய்தியிலிருந்து தெரியவருகிறது.

திபேத் தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ளுதற்காக பீகிங் சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திற்குட்பட்ட இராணுவங்கள் சுதந்திரம் பெற்ற சீனாவின் அளவில்தான் திபேத்திற்குக் கிடைக்கும் சுதந்திரமும் இருக்கும் என்று சில விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

பிரிட்டிஷ்-எகிப்து ஒப்பந்தம்

மீண்டும் பேச்சு ஆரம்பமாகும்?

லண்டன், ஜூன் 2—

பிரிட்டிஷ்—எகிப்து ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகுமா என்பது குறித்து, அதிகாரபூர்வமான வட்டாரங்களில் இன்னும் மௌனம் சாதிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் தளபதி தோழர் ஸ்லிம், எகிப்து ராணுவத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவார் என்றிருந்த ஏற்பாடுகள் கைவிடப்பட்டன.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது என்று எகிப்து சர்க்கார் தீர்மானித்துவிட்டது என்றும், மத்ய பாதுகாப்பு பிரச்னை பற்றி, ஸ்லிம் முடன் சம்பாஷணைகள் நடத்திய பின் நிலைமை இன்னும் தெளிவாகும் என்றும், எகிப்து அயல்நாட்டு மந்திரி கூறினர்.

தேயிலைதோட்டத்திலே!

லண்டன், ஜூன் 2—

தேயிலை தோட்டங்களில் கம்யூனிஸ்ட் சொல்லை பரவியதின் காரணமாக, தேயிலைஉற்பத்தியாளர்களுக்கு ஏற்[illegible]

[illegible] இலங்கை [illegible] யே கவலையை [illegible] விருப்பதாகவும் தெரியவருகிறது.

காற்றுப்பறக்கும் இந்தியர்!

கற்றுக்கொடுத்த விளையாட்டு

ஜோஹன்னஸ்பர்க், ஜூன் 2—

டில்லியில் அசோக வகுப்பான் வசித் தோழர் பாலிட்டின் என்பவர், தென்னாப்பிரிக்காவில் காற்றுாடி விடும் விளையாட்டைக் கற்றுக் கொடுத்து பிரபலப்படுத்தி வருகிறார்.

காற்றாடி விடுவது ஆண்பிள்ளைகளின் விளையாட்டு என்று இவர் கூறுகிறார் காற்றாடி விடுபவர்களின் கிளப் ஒன்றை ஏற்படுத்த இவர் முயற்சி செய்துவருகிறார்.

மலான் ஆட்சியில் குடியேற்றகுழப்பம்

அதிகாரிகளுக்குத் தலைவலி

ஜோஹன்னஸ்பர்க், ஜூன், 2—

தென்னாப்பிரிக்க குடியேற்ற சட்டப்படி அயல்நாட்டினர் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற ஏற்பாடு. ஏப்ரல் 28ல் அமுலுக்கு வந்ததிலிருந்து இவ்விஷயமாக பெருங்குழப்பமேற்பட்டிருக்கிறது.

இப்புது விதிப்படி ஒவ்வொரு வீட்டிலும், ஹோட்டலிலும் இருப்பவர்களைப் பற்றி முழு விவரங்களும் சேகரிக்கப்பட வேண்டுமாம், இந்த கெடுபிடி உத்திரவுகள் குடியேற்ற அதிகாரிகளுக்கும் பெருந் தொல்லை கொடுத்து வருவதாக கூறப்படுகிறது.

பிரிட்டோரியாவிலுள்ளகுடியேற்ற கமிஷனர் ஆபீஸில் இப்புது விதிகள் பற்றி தகவல்கள், அடிக்கடி கேட்கப்பட்டு வருகிறதாக கூறப்படுகிறது.

மொழியால் தமிழர், இனத்தால் திராவிடர்களே

இலட்சியச் சொல் 'திராவிடம்', அதை அழியாச் சின்னமாக்குவோம்

பாக்கிஸ்தான் 'பகற்கனவு' பலித்துவிடவில்லையா?

முத்தமிழ் மாநாட்டில் இரா. நெடுஞ்செழியன் விளக்கவுரை

தலைவரவர்களே! மாநாட்டுப் பிரதிநிதிகளே! தோழர்களே! தோழியர்களே!

முத்தமிழை வளர்க்க, வளம்பெறச் செய்ய, வாழவைக்க நாமெல்லோரும் இங்கு கூடியுள்ளோம். முத்தமிழ் வளர்ச்சி பற்றிய அரிய பெரிய கருத்துக்களை நேற்றும், இன்றும் அறிஞர்களும், புலவர்களும் உங்கள் முன் எடுத்துவைத்து வந்துள்ளார்கள்.

பொது மேடை

இந்த மாநாடு, திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் முழு முயற்சியிலே நடைபெறுகிறது. ஆனால், இந்த மேடையைக் கழகத்தார்க்கு மட்டுமல்லாமல், எல்லோர்க்கும் பொதுப்படையாக இருக்கட்டும் என்ற நோக்கத்தில் அமைத்துத் தந்துள்ளார்கள். 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற வள்ளுவர் வாக்குக்கு ஒப்ப, முத்தமிழ் வளர்ச்சிக்கான கருத்துக்களை வழங்குவோர் யாராயிருப்பினும், அவர்கள் எக்கட்சி, எம்மதம், எக்கருத்துகொண்[illegible] அவர்களு[illegible] [illegible] முத்தமிழை பற்றி ஆராய்வோர் கூட்டமே என்ற விருப்பத்தில், தமிழ் அறிஞர்களையெல்லாம் அழைப்பு அனுப்பி இங்கே ஏற்பாடு செய்துள்ளது. கழகக் கொடிகள் பந்தலின் மேலே பறந்து கொண்டிருக்கின்றன; அவைகள் முத்தமிழ் காக்கும் பண்பினர் எல்லோரையும் "வருக, வருக" என வரவழைப்பதற்காகவே கட்டப்பட்டிருக்கின்றன. கழகம் தமிழ்ப் பேரறிஞர்களையெல்லாம் இருகை நீட்டி நின்று 'முத்தமிழை வளர்க்க வாரீர்" என்று இந்த மாநாட்டின் மூலம் கூவி அழைக்கிறது.

திராவிடம்!

"திராவிடம்" என்ற சொல்லாராய்ச்சிபற்றி பலரும் தங்கள் தங்கள் கருத்தை வெளியிடுகிறார்கள். "திராவிடம்" தமிழ்ச் சொல் அல்லவே அதை எப்படி நீங்கள் வைத்துக்கொள்ளல் சரியாகும் என்று நம்மைக் கேட்கிறார்கள். "திராவிடம்" என்பது, தமிழகத்தைக் கிரேக்கர் வழங்கிய சொல்லாகும், அது அவர்களால் இறக்குமதி செய்யப்பட்டதாகும் என்று அன்பர் ஆர். கே. சண்முகம் கூறுகிறார். வேறு சிலர் வடமொழியாளர் வழங்கிய சொல் "திரவிடம்" என்கிறார்கள். தோழர் அண்ணல் தங்கோ, அது "திராவி" என்ற இழிசொல்லிலிருந்து பிறந்தது என்கிறார். பலரும் பலவிதக் காரணங்களைக் கூறுகிறார்கள். ஆனால், "திராவிடம்" என்ற சொல்லை திராவிட முன்னேற்றக் கழகத்தார், வரலாற்று அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு வழங்குகிறார்களே [illegible]ல்லாமல், சொல்லாராய்ச்சிய அடிப்படையாகக் கொண்டல்ல.

கண்டமாகக் கருதும்போது....?

ஒரு பழம்பெரும் நாகரிகத்திற்கு, அந்த நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் வாழும் பகுதிக்கு மொழிக்கு உலக வரலாற்றறிஞர்களும், மொழி நூல் அறிஞர்களும் "திராவிடம்" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். உலக அறிஞர்கள், வரலாற்று ஏடுகளும் வழங்கும் பெயரையே நாமும் வழங்குகிறோம். அது ஒரு நாட்டிற்கு, மொழிக்கு, மக்களுக்கு நாகரிகத்திற்கு இடுகுறி சிறப்புப் பெயர் என்ற முறையில் வந்துவிட்டது; அதன் ஓசையும் தமிழ் உச்சரிப்புக்கு மாறான [illegible] அண்ணன்மார்களுக்கு முன் தம்பிகளாகிறோம், மொழியால் தமிழர்களாகிறோம். வரலாற்றால், இனத்தால் இனத்தால் திராவிடர்களாகிறோம். துணைக்கண்டப்பிரிவால் இந்தியர்களாகிறோம், கண்டமாகக் கருதும்போது ஆசியாக்காரர்களாகிறோம். நம் கழகம் வரலாற்று முறையில் அரசியல் கழகமாகவளர்ந்துள்ளது. அந்த வளர்ச்சிக்கு ஒப்ப வரலாறு அழைக்கும் "திராவிடம்" என்ற சொல்லையே நாமும் வழங்குகிறோம்.

சொல் குற்றமல்ல

"திரவிடம்" என்றசொல், தூய தமிழ்ச்சொல்லே என்று கூறுவதற்கும் ஆராய்ச்சி கருத்துக்கள் இருக்கின்றன. திரை இடத்தைச் சேர்ந்தவர்கள் "திரவிடர்கள்" என்ற பெயர் பெற்றனர் என்று, ஹீராஸ் பாதிரியார் கூறுவார். வடமொழியாளர், கிரேக்கர்கள் ஆகியோர் 'தமிழகத்தை' அப்பெயரால் வழங்கினர்; "தமிழகம்" என்ற சொல்லை, "திராவிடம்" என்று திருத்தி வழங்கினர் என்று கொண்டாலும் அதில் தவறு ஒன்றுமில்லை, ஏன் என்றால், திராவிடம் என்ற சொல்லுக்கு அடிப்படை தூய தனித்த தமிழ்ச்சொல் என்ற காரணத்தால், தமிழ்ச்சொல் திரிந்துவிட்ட காரணத்தாலேயே அது எப்படித் தமிழ்ச்சொல் அல்லாமற் போய்விடும். இப்படிப்பார்த்தால், "திராவிடம்" என்ற சொல், அண்ணல் தங்கோ போன்றவர்களுக்குப் பிடிக்காமலிருக்கக் காரணமில்லை "திராவிடம்" என்ற சொல் அவருக்கும், ஆர். கே. சண்முகனாருக்கும் பிடிக்கவில்லை என்றால், அதற்குக் காரணம் "திராவிடம்" என்ற சொல்லிலுள்ள குறை அல்ல, அவர்கள் தவறான கருத்துக்களின் மீது தங்களுடைய காதையும், கருத்தையும் ஆக்கி வைத்துக் கொண்டிருக்கும் குறையேயாகும்.

தவறு என்ன?

"திராவிடம்" என்ற சொல் வேதம், ஸ்மிருதி, உபநிஷத்துக்கள் எதிலும் இல்லை, ஆகவே பிடிக்கவில்லை என்கிறார் சண்முகம். "பாக்கிஸ்தான்" எந்த வேதத்திலே, எந்த ஸ்மிருதியிலே, எந்தக் குரானிலே, எந்த வரலாற்று ஏட்டிலே இருந்தது? பாக்கிஸ்தானிகள் எந்த அகராதியிலே இடம் பெற்றிருந்தது? ஒன்றுமில்லையே! பத்து ஆண்டுகளுக்குள்ளாகவே [illegible] இன்று [illegible] பரவி [illegible] இருக்கிறதே, "பாக்கிஸ்தான்" என்ற சொல். ஆனால் "திராவிடம்" என்ற சொல் அப்படிக்கூட இல்லையே, பழந்தமிழ் நூல்களிலும், சமஸ்கிருத நூல்களிலும் இருக்கின்றனவே!

"பாகிஸ்தான்" என்ற பெயரை ஒரு நிலப்பகுதிக்கு இட்டதுபோல, நாமும் நமது நிலப்பகுதிக்குப் புதுப்பொருள் கொள்வோமே. திரு—இடம், திருவிடம்—திரவிடம்—திராவிடம் என்று ஏன் கொள்ளக்கூடாது? அழகிய இடம் என்னும் பொருள் தரும் சொல்லை. நாம் பயன்படுத்துவதாக ஏன் கொள்ளக்கூடாது? வரலாற்றால் அழைக்கப்படும் சொல்லும், "திரவிடம்", நம்மால் அழகிய இடம் என்று பொருள்பட அழைக்கப்படும் சொல்லும் "திராவிடம்"; இரண்டு விதத்திலும் இணங்கியிருக்கும் "திராவிடம்" என்ற சொல்லை ஏன் பயன்படுத்தக்கூடாது? திராவிடத்தில் வாழ்பவர்கள் திராவிடர்கள், இதில் தவறு என்ன? வரலாற்றையும், மொழியையும் ஆராய்ந்து அதனோடு அரசியல், பொருளாதார, சமுதாயப் பிரச்சினைகளையும் ஒட்டிவைத்துப் பார்க்க தோழர் அண்ணல்தங்கோ சிறிது பழக்கம் பெறுவாரானால், "திராவிடம்" என்ற சொல்லின் இன்றியமையாமையை அவர் உணர்வார் என்பதில் ஐயமில்லை

தமிழ்ச் சொல்லே

பெயரைவிட நமக்குப் பொருளே முக்கியம். ஆகவேதான், பொருளைப்பற்றிச்சற்று விளக்கமாகக் கவலைப்படுகிறோம்; அண்ணல்தங்கோவைப் போன்றவர்கள் நாட்டின் பெருவாரியாகத் தோன்றி, பெயர் ஒன்றிலேதான் எங்களுக்கு வேறுபாடு, மற்றெல்லாவற்றிலும் ஒப்புதலுடையவர்களே என்றுகூறுவார்களேயானால், அந்த நிலையில் அந்தப் பெயர் மாற்றத்திற்கு நாங்களெல்லாம் அவசியப் இசைந்து செல்கிறோம் என்பதை இப்பொழுதே உறுதி கூறுகிறேன். "திராவிடம்" என்ற சொல் இன்றைய நிலையின் உணர்ச்சியின், ஊக்கத்தின், தன் திப்பின், தனி நாகரிகத்தின் இருப்பிடமாக இருக்கிற காரணத்தாலும், அது தமிழ்ச் சொல்லே என்று கொள்ள இடமிருக்கிற காரணத்தாலும் அதை நாம் வழங்குகிறோம். இதில் வெட்கப்படவோ, துக்கப்படவோ அவசியம் எதுவுமில்லை

அழகிய நாடு!

நாம் நம்முடைய நாட்டை அழகிய நாடு என்றே அழைக்கிறோம். மாநிலத்தில் அழகிய நாடாகத்தான் நமது திராவிடம் விளங்குகிறது. நமது நாட்டின் மும்புறத்திலும் [illegible] [illegible]முத்தமிழ் [illegible] நிற்கின்றன; இரண்டு பக்கமும் கிழக்குத்தொடர்ச்சி மலையும், மேற்குத்தொடர்ச்சி மலையும், வடக்கே விந்தியமும் இயற்கை அரண்களாக விளங்குகின்றன; மலைகளிலே நீர் அருவிகள்; நீரருவிகள் ஆறுகளோடு சென்று கலக்கின்றன; காடுகளின் இருமருங்கும் மலைச்சாரல்கள்; அவைகளிலே யானைகள்; வானைவளைக்கும் காடுகள்; அவைகளில் உலகோர் புகழும் சந்தனமும், அகிலும்; எங்கு பார்த்தாலும் சோலைகளும், சோலைகளும்; அவைகளில் மான்கள் துள்ளுகின்றன; குயில்கள் பாடுகின்றன; வற்றாத ஆறுகள் வளைந்துவளைந்து ஓடுகின்றன; அவற்றின் அருகெல்லாம் விளைவைப்பெருக்கும் வயல்கள்; கதிர்கள் விளையும் கழனிகள்; கடலிலே முத்து; நிலத்திலே தங்கம், வெள்ளி, இரும்பு போன்ற உலோகங்கள்; இவற்றையெல்லாவற்றையும்விட பண்பட்ட நாகரிகத்தைத் தாங்கி நிற்கும் தமிழ்; அதனை வழங்கும், மணவளம் படைத்த மக்கள்; இவ்வளவு அழகான பொருள்கள் காணப்படும் நாட்டை, நமது நாட்டை ஏன் அழகியநாடு என்று அழைக்கக்கூடாது.

ஆரியம்—திராவிடம்

ஆரியம், திராவிடம் என்று பேசுவது தவறு என்று கூறுகின்றனர், ஆராய்ச்சியறிவு, வரலாற்றறிவு அற்ற சிலர். ஆரியக் கருத்துக்களின் இருப்பிடம் வடமொழி என்பதையும், திராவிட நாகரிகக் கருத்துக்களின் இருப்பிடம் தமிழ் என்பதையும் யாரும் மறுக்க இயலாது. இரண்டும் ஓரிடத்திற்றோன்றி வளர்ந்த மொழிகள் அல்ல; ஓரிடத்திலேயே இரண்டும் தோன்றியிருக்கவும் முடியாது. கங்கை, சிந்து நதிக்கரை திரங்களிலே ஆரியம் வளர்ந்தது; காவிரி, வைகை ஆற்றங்கரைகளிலே திராவிடம் வளர்ந்தது. இரண்டும் ஒன்றோடொன்று [illegible]கும்படி ஏற்பட்டது [illegible]ரிய -திராவிட [illegible] மீது [illegible]ஞ்சனை, சூழ்ச்சி [illegible] [illegible] [illegible]ரியம் ஆதிக்கம் [illegible] தமிழ் [illegible] [illegible] பதித்தும் ஆரியக் கற்பனைக் கருத்துக்கள் வளர்ந்தன திராவிடரின் உயரிய பண்பாடுகள் மறைந்தன. உயர்ந்த கருத்துக்கள் மறைந்து ஆரியரின் தாழ்ந்த அடிமைக்கற்பனைக்கருத்துக்கள் வளர்ந்தன. வேறு நாகரிகத்தின் கருத்துக்கள் இருக்கும் கருத்துக்களைவிடச் சிறந்தனவாக, நன்மைபயப்பனவாக, வாழவைப்பனவாக இருந்தால், அவை ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால், ஆரியக்கருத்துக்களோ மிக இழிந்தவை: திராவிடக் கருத்துக்களோ மிக உயர்ந்தவை; உயர்ந்த கருத்துக்கள் நிலவும் திராவிடம், மேலும் மேலும் வளர்ந்தோங்க வழியில்லாமல், தாழ்ந்த ஆரியக் கருத்துக்கள் தடை செய்துவிட்ட காரணத்தால்தான், திராவிடம் வரவர சீர்குலையும் நிலைமை ஏற்பட்டது. ஆரியக் கருத்துக்கள் எவ்வளவு இழிவுடையனவாக இருக்கின்றன என்பதையும், அதே சமயத்தில் திராவிடக் கருத்துக்கள் எவ்வளவு உயர்ந்தனவாக விளங்குகின்றன என்பதையும் ஆரிய நாகரிகம்—திராவிட நாகரிகத்தை எவ்வெவ் வகையிலெல்லாம் அழித்து ஒழித்து, ஆதிக்கம்செலுத்தி வருகிறது என்பதையும் அறிய வேண்டுமானால், தொல்காப்பியர் காலத்திலிருந்து, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் காலம் வரையிலும் எழுந்த தமிழ் இலக்கியங்களைத் தொகுத்துவைத்து ஆராய்ந்து பார்த்தாலே இனிது விளங்கிக் கொள்ளலாம்.

ஒன்று திரளவேண்டும்?

தமிழர்கள் தாங்கள் கொண்டிருந்த உயர்ந்த பண்புகளையெல்லாம் விட்டு, இழிந்த ஆரியக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியதால்தான், இடைக்காலத்தில் சீரழிவு எய்தினர். மீண்டும் தமிழர்கள் — திராவிடர்கள் வாழ்வு வளம் பெறவேண்டுமானால், இயற்கையோடு இயைந்து வளர்ந்த பகுத்தறிவுக் கருத்துக்கள், சமுதாய வாழ்வில் இடம் பெறவேண்டும். பகுத்தறிவு விதைகளை இலக்கியங்களின் மூலமாகத் தூவும் பணியினை இளைஞர்கள் மேற்கொள்ளவேண்டும்.

தமிழர்களுக்குத்தாய்மொழியாகிய தமிழும், அகில உலக மொழியாகிய ஆங்கிலமும் மட்டும் இருந்தால் போதும்; இந்தி எந்த விதத்திலும் தேவைப்படாததொன்று, எந்த வழியாக நுழைக்கப்பட்டாலும், அதனை எதிர்த்துவிரட்டிட தமிழ்ப்பெருங்குடிமக்கள் அனைவரும் ஒன்றுதிரளவேண்டும் அந்த ஆற்றலை இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

மொழியால் தமிழர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு நமக்குத் தரவேண்டும்" என்பதுதான் எனது ஆவல்."

என். வி. நடராசன்

தலைவரவர்களே, தோழர்களே, தாய்மார்களே!

இன்று நடைபெறும் இம்மாநாடு, திராவிட முன்னேற்றக் கழக ஆதரவில் நடைபெறுவதாகும். இம்மாநாட்டில், மந்திரிமார்களோ உயர்ந்த கனதனவான்கள் என்று கூறப்படுபவர்களோ கலந்துகொள்ளவில்லை. ஆனால் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் மொழிக்கும் ஏற்பட்ட பேராபத்துக்களை தகர்த்தெறிந்துப், சிறைக்கோட்டம் செல்லுமளவுக்குத் தொண்டாற்றிய லட்சியவாதிகள் நிறைந்துள்ளனர். அவர்களை ஆதரிக்கும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடியிருக்கிறீர்கள், உணர்ச்சிப் பெருக்கால்.

எனக்கு முன்பு பேசிய புலவர்கள் கா. அப்பாதுரையாரும், மீனாட்சிசுந்தரனாரும் தமிழின் சிறப்பை, அதன் இலக்கண இலக்கிய மேன்மையை விவரித்துரைத்தனர் இயல், இசை, கூத்து என்னும் பாகுபாடுகளை விளக்கினர். எனவே, நான் மீண்டும் அவைகளைப் பற்றிக் கூற முற்படவில்லை.

பொதுவாக இன்று அரசியலார் தமிழுக்குப் பெருங் கேட்டை விளைவித்துள்ளனர் இதுவரையில்லாத முறையில் இந்தி மொழியை 1-வது முதல் 6-வது பாரம் வரை கட்டாயமாகத் திணித்துள்ளனர். சமஸ்கிருத மொழியை மறைமுகமாகப் பரப்பி வருகின்றனர்.

திராவிடத்தில் பெரும்பாலும்—அதுவும் பண பலத்துடனும், தக்க வசதியுடனும் நடத்தி வருகின்ற தமிழ்ப் பத்திரிகையாளர்கள், இந்தியைப் பரப்புவதில் பெரும் அக்கரை காட்டுகின்றனர். சுருங்கக்கூற வேண்டுமானால், புற்றீசல்கள் போல தமிழ் மொழியைச் சுற்றி தொல்லை விளைவித்து வருகின்றனர்.

ஆனால், தமிழ்மொழியை வளர்க்க இப்பத்திரிகையாளர்கள் சிறிதாவது அக்கரை காட்டாவிட்டாலும், அதற்கு நேர்விரோதமான முறையில் நடவாமலிருப்பினும் நல்லதென்று கூறலாம்.

இன்று தமிழ்ப் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால், தமிழ்க்கலை என்ற பகுதியில் ராமாயணம், பாரதம், பெரிய புராணம், போதாக்குறை குஜோஸ்யப் பகுதி என்ற பழமைகளை மக்களை மடமைக்கிழுத்துச்செல்லும் கேடுகளைப் பரப்பி வருகின்றனர். இவர்களெல்லாம் தமிழ்ப் பத்திரிகையாளர்களாம்! (வெட்கம்! வெட்கம்! என்ற குரல்)

திருவள்ளுவர்—திருக்குறள், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போன்றவர்களின் வரலாறோ, தமிழின் சிறப்பை விளக்கும் காவியங்களோ இவர்கள் கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

அவைகளை எங்கள் போன்றவராகிய சுயமரியாதைக்காரர்கள்—திராவிட—இயக்கத்தார்—எடுத்துக் கூறினால், எழுதினால் அதற்குப் பெரும் விரோதிகளாம்.

1939—40-ம் ஆண்டுகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரசியலார் கேடு விளைவித்தபோதும், 1948-ம் ஆண்டில் சுயராஜ்ய ஆட்சியில் இந்தியைப் புகுத்தியபோதும் நாம் போராடியிருக்கிறோம். அதசமயம் நம்மை எதிர்த்த தமிழர்களில் சிலர் அதாவது 'கல்கி' தினசரி ஆசிரியர்களும் 'தேசியத் தோழர்களும் இன்று இந்தி ஏகாதிபத்தியத்தின் கோலத்தைக் கண்டு புலம்புகின்றனர்.

இதைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம். அன்று பச்சிளங் குழந்தைகளை கட்கத்திலே ஏந்தி, சிறை சென்ற தாய்மார்களின் தன்னலமற்ற தொண்டு, ஆயிரமாயிரத் தோழர்கள் தடியடி பட்டுச் சிறைசென்ற கோலம், இன்று திராவிடத்திலே ஓர் புத்துணர்ச்சியை ஊட்டியுள்ளது.

இந்நிலையில், நாம் செய்ய வேண்டிய முதற் கடமை என்ன? முத்தமிழின் பெருமையை, சிறப்பை பேசுவது, ஆக்கந்தேடுவது மட்டும் போதாது. இதற்கு அடிப்படையாக தமிழ் வாழ்ந்தால் தான், அதைச் சார்ந்த இசையும், கூத்தும் நிலைக்கும்.

இன்றோ, நம் அரசியலார் தமிழ்மொழியை அடியோடு அழிக்கும் வகையில் இந்தியைப் புகுத்தியுள்ளனர் முன்னாள் அமைச்சர் அவினாசியாரே அரசியலாரின் கொடுமையைக் கண்டு கண்ணீர் வடிக்கிறார் என்றால், நான் விவரித்துக் கூற வேண்டியதில்லை.

எனவே, முதன்மையாக இன்று தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருந் தடையைத் தகர்த்தெறிய இங்கு கூடியுள்ள புலவர்களும், மாணவர்களும், பாட்டாளிமக்களும், தாய்மார்களும் ஆவனசெய்ய முன்வரவேண்டும். இம்மாநாட்டின் முடிவைக்கண்டு—தீர்மானத்தைக் கண்டு, மேலால் செய்யப்படும் நடவடிக்கைகளைக் கண்டு அரசியலாரின் வக்கிர புத்தி மாறவேண்டும் அத்தன்மையில் இம்மாநாடு பயன் தரத்தக்கதாயிருக்கவேண்டும் என்பது தான் அனைவரின் எண்ணமாகும்.

"தமிழன் மேன்மையை இகழ்ந்தவனை, தாய் தடுத்தாலும் விடேன்" என்ற முழக்கையேற்றிய நம் புரட்சிக் கவிஞர் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டின் விளைவாக கட்சி, ஜாதி, மதம் ஆகியவைகளை மறந்து, திராவிடத்தை தாயகமாகக்கொண்டுள்ள அனைவரும் ஒன்று சேர்ந்த முறையில், வடநாட்டின் பெரிய படையெடுப்பாகிய இந்திமொழி ஏகாதிபத்தியத்தைத் தகர்த்தெறிய ஆவன செய்ய உறுதிகொள்வோமாக, அதற்கேற்ப செயல் முறையில் கடமையாற்றுவோமாக என்ற வேண்டுகோளோடு, எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்."

மதுரை மாவட்ட

தி. மு. கழக முதல் மாநாடு

ஜூன் திங்கள் 10, 11 சனி ஞாயிறுகளில்

சோழவந்தான் "செல்வம் பந்தலில்" நடைபெறும்

மாநாடு சனிக்கிழமை பிற்பகல் 4-மணிக்கு

தோழர் டி. வி. நமசிவாயம் இன்னிசை அரங்குடன் துவங்கும்

★

தலைவர்:- தோழர் ஈ. வெ. கி. சம்பத்

துவக்குபவர்:- தோழர் கே. கே. நீலமேகம்

பொதுச் செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்கிறார்கள்

சனி இரவு "சிலை" நாடகம்

(மதுரை அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தார் நடிப்பது)

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெறும்

ஞாயிறு இரவு "சந்திரமோகன்" நாடகம்

(கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ. நடிப்பது)

[illegible]

324, அழகரடி, மதுரை.

குறிப்பு:—6–6–50 முதல் [illegible]

ஆளத்தெரியாதவர்கள்..!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் தக்க வழிகாட்டவில்லை; நம்மையே நம்பிக் கொண்டிருக்கிறது. நீங்களும் நானும் ஒத்துழைக்க வேண்டும்" என்று மக்களைக் கட்டிக்கொண்டு அழுகிறார்.

அரசாங்கம் மக்களுக்கு வழிகாட்டவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று முதலமைச்சரே சொல்லக்கூடிய நிலையில் நாடு இருக்கிறதென்றால், ஆட்சிமுறையின் லட்சணத்துக்கு வேறென்ன எடுத்துக்காட்டு தேவை!

காங்கிரசார் ஆட்சி பீடமேறி ஆண்டுகள் மூன்றுக்கு மேலாகின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படாவிடினும், ஏதேனும் ஓரளவுக்கேனும் முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறதாவென்றால் இல்லை. உற்பத்திப் பெருக்கம் பற்றிய பேச்சுகள் தான் பெருகி உள்ளனவேயன்றி, உற்பத்தி பெருகவில்லை. 8 அவுன்ஸ் அரிசிப் பங்கீட்டை 6 அவுன்சாக்கலாமா என்று திட்டமிடுகின்றனர் ஆட்சியாளர். தேய்கின்ற திட்டங்களேயன்றி, மேலை நோக்கிப்பாய்கின்ற திட்டங்கள் ஏதும் இல்லை. இதற்கெல்லாம் காரணம், ஆட்சியாளரின் வகைகெட்ட தன்மையேயன்றி வேறில்லை. வகையறியோம், வழியறியோம் என்று சொல்ல ஆரம்பித்து விட்டனர் ஆட்சியாளர். ஆட்சியாளரின் இப்படிப்பட்ட நிலையின் படப்பிடிப்புத் தான் "மக்களுக்கு எனது சர்க்கார் ஏதும் வழிகாட்டவில்லை" என்று பண்டிதர் வாய்விட்டுக்கூறும் நிலையாகும்.

இங்ஙனம், ஆட்சியாளர் தமது பலவீனத்தைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் படலத்துக்கு இந்நாட்டுத் தேசீயர்கள் "பொதுமக்களின் பொறுப்பு" என்றும், 'பொதுமக்களின் பொறுப்பை வலியுறுத்துகிறார் நேரு" என்றும், 'தேசத்தின் பொருளாதார நிலைமையை விளக்குகிறார் இந்தியப் பிரதமர்" என்று பலவாறு மெருகு கொடுக்கப்படுவது வழக்கம். ஆனால் உண்மை நிலை பயங்கரமான நிலையாக இருக்கிறது.

எனவே, காங்கிரஸ் ஆட்சி திறனற்ற ஆட்சி என்பது, பண்டிதரின் பேச்சிலிருந்து தெளிவாகத் தெரிகிறது!

மே. பாக்கிஸ்தானில் அரிசிப் பங்கீடு ரத்து

கராச்சி, மே 31—

1950-ம் ஆண்டு ஜூன் மூன்றாம் தேதியிலிருந்து, மேற்கும் பாக்கிஸ்தானில் அரிசிப்பங்கீட்டை ரத்து செய்துவிடப் பாகிஸ்தான் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இதன்படி கராச்சி, குவெட்டா ஆகிய இடங்களைத் தவிர அரிசியை சேர்ப்பவர்கள் தாங்கள் எங்கு வேண்டுமானாலும் எடுத்துச்செல்லலாம்.

இனி நடப்பவை

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை தி. மு. கழக சார்பில் 3–6–50 இரவு 8 மணிக்கு, 3 சுப்பய்யா தெரு நகர மண்டபத்தில் தோழர் எஸ். எம். இப்ராஹீம் முகமது அவர்கள் தலைமையில் கமிட்டிக்கூட்டம் நடைபெறும்.

● ● ●

பொள்ளாச்சி:—தி. மு. க. சார்பில் தோழர் க. நடராசு அவர்கள் தலைமையில் 4–6–50 அன்று காலை 10 மணி அளவில் தி. மு. வாலிபர் கழகக் கட்டிடத்தில் ஓர் செயற்குழுக்கூட்டம் நடைபெறும்.

● ● ●

இடையர்குறிச்சி:— சாட்டான்மைக் கழகத் துவக்கப்பள்ளிக்கூடக் கட்டிடத் திறப்பு விழா, 5-6-50 தோழர் வெ. ரா. கி. இராசமாணிக்கம் அவர்களால் திறப்புவிழா சிறப்புற நடைபெறும்.

* * *

சென்னை:— 11—6—50 காலை 9-மணிக்கு 'ராஜாஜி மண்டபத்தில்' தமிழ்நாடு தாம்பரப் பட்டோர் பெடரேசன் மாநாடு கூடும். தோழர் பி. என். ராஜ்போஜ் அவர்கள் தலைமை வகிப்பார்.

கிரிக்கெட் பந்தால் விபத்து

லண்டன், ஜூன் 2—

கிரிக்கெட் பந்து ஒரு 13 வயது பையனின் மண்டையில் அடிபட்டதன் காரணமாக, அப்பையன் டாக்டர் உதவி வருமுன்னாலேயே மாண்டான்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu mari Chetty St, Madras-1.